## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 116/2019 | Date : 13.06.2023 | PW3 |
|---|---|---|
| Name: மயில்சாமி | S/o. **குப்பன்** | |
| Evidence Recorded Time: 12.11 P.M. to 12.15 P.M | | |

6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. ராமசாமி அழைத்து நான் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் ராமசாமி சொல்லிதான் வந்தேன். நீதிமன்றத்திலிருந்து தான் சம்மன் வந்தது, அதன் பிறகுதான் சாட்சி சொல்லவந்தேன். வாதி ராமசாமி எனக்கு நெருங்கிய உறவினர். ராமசாமி தாவா சொத்தை அனுபவித்து வருவதற்கு என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 6 முதல் 8 பிரதிவாதிகள் எந்த தேதியில் நிலத்தை அளக்க வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் வெள்ளையன் என்பவர் பெயர் உள்ளது என்றால் சரிதான், அது ரீசர்வேவில் மாறியுள்ளது. அந்த பட்டா பி.வா.சா.ஆ.1 ஆகும். பட்டா மாறுதல் சம்மந்தமாக யாரிடம் எந்த தேதியில் மனு கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தேதி தெரியாது, மனு கொடுத்த விவரம் தெரியும். பிரமாண பத்திரத்தில் மனு கொடுத்த தேதி தெரியும் என்று சொல்லப்பட்ட விவரம் தவறு என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. வாதி ராமசாமியின் உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு 6 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

ஒம்/–PW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்